[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 20

காரணமாக, உலக வங்கியிடம் நம்பிக்கையுடன் நிதியுதவி கேட்க நம்மால் முடிகின்றது. அனுமதிக்கக்கூடிய நிதியுதவியைப் பெறுவதற்கு முன்னர், அந்த வங்கி கூறுகின்ற பொறுப்புகள் அனைத்தையும் நிறைவு செய்ய அவகாசம் தேவைப்படுகின்ற நிலைமை மற்ற மாநிலங்களுக்கு இருக்கலாம்; ஆனால், நமக்கு இல்லை. 5 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சத்துணவு அளித்து, பாலர் பள்ளிக் கல்வி புகட்டி, முத்தடுப்பு ஊசி போட்டு, ஏழைய சுகாதார வசதிகளை அளிக்கும் ஒரு மைய அமைப்பாக குழந்தை நல நிலையம் ஒவ்வொன்றும் செயல்படும். கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் நோய்த் தடுப்பு மருந்துகளை கொடுப்பதுடன் தக்க சிகிச்சையையும் இந்த நிலையம் அளிக்கும். இத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கவும், சுகாதார வசதி அளிக்கவும், சுமார் ரூ. 300 கோடிக்கு நிதியுதவி அளிக்க அரசு ஏற்கெனவே பொறுப்பு ஏற்றிருக்கிறது. இந்த நிலையத்திற்கு நிலையான கட்டிடங்கள், சாதனங்கள், மருந்துகள், பயிற்சி வசதிகள் மற்றும் தகவல் தொடர்பு இணைப்புகள் போன்ற அடிப்படை வசதிகளை நாம் உலக வங்கியிடமிருந்து கோருகின்றோம். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 400 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

காலணி வழங்கும் திட்டம்.

15. குழந்தைகளுக்கும், கிராமப்புறங்களில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசமாகக் காலணிகள் வழங்கப் படும் என்று அண்மையில் அறிவிக்கப்பட்டது. இது, நாம் இவர்களுக்கு ஏற்கெனவே அளித்து வருகிற பல்வேறு வகையான உதவிகளுக்குத் துணை சேர்க்கும் மற்றோர் உதவியாக இருக்குமென உறுதியாக நம்புகிறோம். ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரை செல்லும் பள்ளிச் சிறார்களுக்கு இன்று சீருடைகளும், பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப் படுகின்றன. 1987-88 ஆம் ஆண்டிலிருந்து இவர்கள் இலவசக் காலணிகளையும் பெறுவர். மேலும், கிராமப்புறங்களில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களும் இலவசமாகக்

1987 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

காலணிகளைப் பெறுவர். குழந்தை நல நிலையங்களே பொறுப்பேற்று இவர்களுக்கு இலவசமாகக் காலணிகளை வழங்கும். இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் கிடைக்கும் மற்றொரு பயன், தொடித்துப் போன காலணி தயாரிப்போர் சங்கங்கள் புத்துயிர் பெறுவதோடு, மாநிலம் முழுவதும் பரவலாகப் புதிய சங்கங்களும் உருவாகும். அதன் மூலம் காலணி தைப்போர் ஆயிரக்கணக்கான பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கும்.

நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம்.

16. உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெறும் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிற வேறு இரு திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டமும், நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து சென்னை மாநகருக்கு அதிக நீர் வழங்கும் சிறப்புத் திட்டமும் ஆகும். ரூ. 150 கோடி செலவிலான இந்த நீர் வழங்குத் திட்டத்திற்கு நிதி வழங்குவதற்கு முன்னர் உலக வங்கியுடனான பேச்சுவார்த்தை விரைவில் நடக்க இருக்கின்றது. ரூ. 428 கோடி செலவிலான தமிழ்நாடு நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம் பற்றி உலக வங்கியின் பரிசீலனையும் முடிவுற்றுள்ளது. இவ்விரு திட்டங்களை மேற்கொள்வதன் வாயிலாக நம்முடைய நகர்ப் பகுதிகளுக்கு போக்குவரத்து வசதி, வீட்டு வசதி, குடிநீர் வழங்கு வசதி ஆகிய நீண்டகாலத் தேவையை நிச்சயமாக நம்மால் நிறைவு செய்ய முடியும்.

முக்கியமான துறைகளுக்கு ஒதுக்கீடு.

17. பல்வேறு முக்கியமான துறைகளுக்கான ஒதுக்கீட்டையும் அரசு கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. கல்விக்காக, நடப்பாண்டில் ரூ. 551 கோடி ஒதுக்கப்பட்டிருக்க, 1987-88 இல் ஒதுக்கீடு ரூ. 597 கோடியாகும். வேளாண்மைக்காக 1986-87 இல் ரூ. 118 கோடி ஒதுக்கப்பட்டிருக்க 1987-88 இல் ஒதுக்கீடு ரூ. 141 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காக 1986-87 இல் ஒதுக்கப்பட்ட ரூ. 177 கோடி, 1987-88 இல் ரூ. 193 கோடியாக